**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 110 of 2026**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திருமதி. தனலெட்சுமி | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.24.07.2026**

**முதல் விசாரணை**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.08.2025ம் தேதி நானும், தலைமை காவலர் 1240 சண்முகசுந்தரம், தலைமை காவலர் 501 இராமன் ஆகியோருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது மகிழம்பாடி மெயின் ரோடு அருகில் ஒருவர் அவரது வீட்டின் அருகில் மதுபானம் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் பேரில் 09.30 மணிக்கு அங்கு சென்று பார்த்தபோது சந்தேகப்படும் படியாக நின்று கொண்டிருந்த ஒரு நபர் எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து நான் விசாரித்தபோது, சுந்தரமூர்த்தி த/பெ. கலியபெருமாள், மகிழம்பாடி மெயின்ரோடு, புறத்தாக்குடி, இலால்குடி தாலுக்கா என்று கூறினார். பின்பு அவரை சோதனை செய்த போது அவர் கையில் வைத்திருந்த கட்டைப் பையில் அரசு டாஸ்மாக் மதுபானம் 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்கள் வைத்திருந்தார். அவரை நான் விசாரணை செய்தபோது, அவர் தான் அரசு மதுபான கடைகளில்

மதுபாட்டில்களை மொத்தமாக விலைக்கு வாங்கி வைத்துக் கொண்டு கடை மூடி இருக்கும் நேரத்தில் தனக்கு சுயலாபம் கருதி அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருப்பதாக கூறினார். அந்த அரசு மதுபான பாட்டில்களுக்கு எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இன்றி விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்ய கைவசம் வைத்திருந்த குற்றத்திற்காக காலை 09.45 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தேன். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் உடன் வந்த காவலர்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை காலை 10.00 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உடன் வந்த காவலர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்பு எதிரியுடன் காலை 11.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 239/2025 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7/அ.சா.3** ஆகும். பின்பு 22.08.2025 ம் தேதி 11.30 மணியளவில் காவல் நிலையத்தின் பின்புறம் கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து உடன் வந்த காவலர்கள் முன்னிலையில் நான் காலை 11.30 மணியளவில் 26 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்தேன். அந்த அழித்தல் மகஜரில் உடன் வந்த காவலர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்பு மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>**

நான் ரோந்து பணிக்கு அரசு வாகனத்தில் சென்றேனா அல்லது எனது சொந்த வாகனத்தில் சென்றேனா என்றால் எனது சொந்த வாகனத்தில் சென்றேன். ரோந்து பணி சென்றது குறித்து பொது நாட்குறிப்பில்

குறிப்பிட்டேனா என்றால் குறிப்பிட்டேன். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரசு மதுபான பாட்டில்களின் மதிப்பு என்னவென்றால் குறிப்பிடப்படவில்லை. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரசு மதுபான பாட்டில்களில் முத்திரை இருந்ததா என்றால் இருந்தது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்கள் இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. இந்த வழககில் மாதிரி வரைபடம் தயார் செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு எதிரிக்கு எதிராக பொய்யான வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஒப்பம்/-சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.24 16:42:04 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி